MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

Jurong Health

SingHealth

SINGHEALTH / PIL / T131R0

நோயாளி தகவல் கையேடு

டிரான்எக்ஸ்சாமிக் அமிலம்

(TRANEXAMIC ACID)

உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

டிரான்எக்ஸ்சாமிக் அமிலம் (Tranexamic acid)

இரத்தப்போக்கு அபாயம் உள்ள நோயாளிகளுக்கும், ஏற்கனவே இரத்தப்போக்கினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இந்த மருந்து இரத்தக் கட்டிகள் கரைவதைத் தடுத்து, அதன்மூலம் இரத்தப்போக்கு மேற்கொண்டு நிகழ்வதைத் தடுக்கிறது.

மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை மருத்துவர் கூறும் அளவில் பயன்படுத்துங்கள்.

டிரான்எக்ஸ்சாமிக் அமிலம் ஊசி வழியாக சிரை இரத்தக்குழாய்க்குள் செலுத்தப்படலாம், அல்லது வாய்வழி மாத்திரையாக அல்லது குடிமருந்தாக எடுத்துக் கொள்ளப்படலாம். இந்த மருந்து ஒரு நாளைக்கு 2-3 முறை தரப்படலாம்.

பல் சிகிச்சை சிலவற்றில் இரத்தக் கசிவு ஏற்படுவதைத் தடுக்க, இந்த அமிலம் வாய்க் கொப்பளிப்பு மருந்தாகவும் தரப்படலாம்.

மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

வயிற்றுப்போக்கு, தலைவலி, குமட்டல், தலைக் கிறுகிறுப்பு, தலைச்சுற்றல் மற்றும் மூக்கடைப்பு போன்ற பக்க-விளைவுகள் ஏற்படலாம். பக்க-விளைவுகள் பெரும்பாலும் சிறிதளவே பாதிக்கும். இவை கடுமையாக இருந்தாலன்றி, மருந்தை நிறுத்த வேண்டிய அவசியமில்லை.

பின்வருபவை இருந்தால், தயவு செய்து உடனே மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- பார்வை மங்குதல் அல்லது நிறங்கள் மாறித் தெரிதல் போன்ற கண்பார்வைப் பிரச்சினைகள்
- சிறுநீர் கழிக்க முடியாமை

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள், வைட்டமின்கள் அல்லது வேறு மருந்துகள், குறிப்பாக, உங்களுக்கு சிறுநீரக நோய் அல்லது கண் பிரச்சினைகள் இருந்தால், அல்லது முன்பு இருந்திருந்தால் அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள். உங்களுக்குக் கொடுக்கப்படும் மருந்தின் அளவை மாற்ற வேண்டியிருக்கலாம்.

மற்ற மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், அதைக் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்ஈ முகம்/கண்கள்/ உதடுகள் வீங்கும், மூச்சுவிட சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமும் நேரடி வெளிச்சமும் படாதவாறு, அறை வெப்பநிலையில் ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.